தமிழ்நாட்டு மக்கள் வாழ்வில் ஒளியேற்றும் 'திராவிட மாடல்' ஆட்சி நாயகரின் சாதனைகள்!

தமிழகத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யில் தி.மு.கழக ஆட்சி அமைந்து, மே7 ஆம் தேதி அன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று முதல்வராக பொறுப்பேற்றதில் இருந்து அவர் நிகழ்த்திய சாதனைகள் எத்தனை எத்தனை…? அத்தனையும் தமிழக மக்களுக்கு முத்துக்களால் கோர்க்கப்பட்ட முத்துமாலையாகும்.

அந்த சாதனை முத்துமாலையில் உள்ள முத்துக்கள் ஒவ்வொன்றும் தமிழகத்தை, தமிழக மக்களை வளப்படுத்தும் திட்டங்கள் அச் சாதனை முத்துக்களை இங்கே தொகுத்தளித்துள்ளோம்.

மே -7, 2021 - கொரோனா நிவாரண நிதியாக ரூபாய் 4000 உதவித் தொகை வழங்கப்படும்

ஆவின் பால்விலை லிட்டருக்கு ரூ. 3 குறைப்பு

அரசுப் போக்குவரத்து பேருந்துகளில் மகளிர் இலவச பயணம்

100 நாட்களில் தீர்வு காண உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களுக்கு அதற்கான கட்டணத்தை தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கும்.

அரிசி குடும்ப அட்டைதராரர்கள் அனைவருக்கும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு

திருக்கோவில்களில் மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு கொரோனா நிவாரண நிதியுதவி ரூ4000 மற்றும் 10 கிலோ அரிசியுடன் 15 வகையான மளிகைப் பொருட்கள்.

திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை

மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரூ.4000 கொரோனா நிவாரண உதவித் தொகை

வன்னியர்கள், சீர்மரபினர் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சிறப்பு ஒதுக்கீடு வழங்கி அரசாணை வெளியீடு.

நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதி உதவி ரூ,3000 ஆக உயர்வு

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை பெருக்கவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு விழாவில் 49 திட்டங்களின் மூலம், 28,508 கோடி முதலீட்டில், 83,482 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் புதிய தொழில் நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தாயின.

தனியார் மருத்துவமனைகளில் இலவச கொரோனா தடுப்பூசி போடும் இந்தியாவிலேயே முதல் திட்டத்தினை காவேரி மருத்துவமனையில் தொடங்கி வைத்தார்.

இந்திய வரலாற்று அரசியலில் தவிர்க்க முடியாதவர் என்றால் அது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். தன் வாழ்நாள் முழுவதும் தமிழக மக்களுக்காகவே பாடுபட்ட பெருகமன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது ஜனநாயக கடமையை பாராட்டும் வகையில், தமிழக சட்டப் பேரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களை திறக்க வைத்து கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்த்தார் தமிழக முதல்வர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொலை நோக்குத் திட்டமான மக்களைத் தேடி மருத்துவம் என்ற உன்னதத் திட்டத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாமன்னர் ராஜேந்திர சோழன் தமிழர்களுக்கே பெருமை சேர்க்கும் வகையில் தமிழர்களின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலைக் கட்டினார். அவரது பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார் முதல்வர்.

முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. கழகம் ஆட்சி அமைந்து, முதல் பட்ஜெட்டினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப் பட்டது.

கழக தேர்தல் அறிக்கையில் வேளாண் துறைக்கென்று தனியாக பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்ததை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றினார். ஆம், தமிழக வரலாற்றில் தமிழகத்தின் உயிர்நாடியான வேளாண் துறைக்கென்று தனியாக பட்ஜெட் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

தமிழினத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் தகைசால் தமிழர் விருது.

தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி விருது.

ஞானபீடம், சாகித்ய அகாடமி மற்றும் மாநில உலகளாவிய அமைப்புகளின் இலக்கிய விருதுகள் பெற்றவர்களுக்கு அரசு வீடு.

அரசு பள்ளிகளிலும் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை.

இந்துச் சமய அறநிலையத் துறை திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை.

100 திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு. 100 திருக்கோயில்களில் நந்தவனங்கள், மற்றும் தெப்பக்குளங்கள் சீரமைப்பு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னை மெரீனாவில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ39 கோடி மதிப்பீட்டில் நினைவிடம்

தமிழகத்தில் மறுவாழ்வு மையங்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட ரூ.317.40 கோடி நிதி ஒதுக்கீடு.

ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை இரத்து செய்யக் கோரும் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சென்னை அண்ணா சாலையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

அயோத்திதாசர் அவர்களுக்கு வடசென்னையில் மணிமண்டபம் அமைக்கப்படும்.

வ.உ.சி., நினைவு நாள் நவம்பர் 18, தியாகத் திருநாளாக அறிவிப்பு

தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17 ஆம் நாளை ஆண்டுதோறும் சமூக நீதி நாளாகக் கொண்டாடுவோம்.

பெரும் புலவர் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமையைப் போற்றும் வகையில்செப்டம்பர்11மகாகவிநாள்" கடைபிடிக்கப்படும்.

தமிழக காவலர்களுக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படும்.

பெண் காவலர்கள் வி.ஐ.பி.க்கள் வருகையின் போது சாலையில் பாதுகாப்பு பணியில் நிற்பதில் இருந்து விதிவிலக்கு

விழுப்புரம் மாவட்டத்தில் 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணி மண்டபம்.

தன்னாட்சி அதிகாரத்துடன் தமிழ் நாடு ஆதி திராவிடர் பழங்குடியினர் நல ஆணையம்.

திருநெல்வேலியில் தமிழனின் பெருமையை விளக்கும் வயில் ரூ 15 கோடியில் பொருநை அருங்காட்சியகம்.

ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் தொடக்கம்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ36.52 கோடியில் பேட்டரியில் இயங்கும் 1684 மூன்று சக்கர வாகனங்கள் வழங்கல்.

ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் தொடக்கம்.

மக்களைத் தேடி மருத்துவ மையம் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவ மனையில் அறிமுகம்.

கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருது (2010 முதல் 2019 வரை) 10 ஆண்டுகளுக்கு அறிவிப்பு

அக்டோபர் 5 அருட்பிரகாச வள்ளலார் பிறந்த தினம். தனிப்பெருங்கருணை நாள் என அறிவிப்பு

சேலம் மாவட்டத்தில் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப் பணிகள் துவக்கம்.

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க புலம் பெயர் தமிழர் நல வாரியம் அறிவிப்பு

திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி திருக்கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடக்கம்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தொழிற்கல்விகளில் 7.5. சதவிகித இடஒதுக்கீடு படிப்பு செலவு முழுமையும் அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு

திருக்கோவில்களில் தலைமுடி மழிக்கும் பணியாளர்களுக்கு மாத ஊக்கத் தொகையாக ரூ 5000 வழங்கும் திட்டம் தொடக்கம்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, பொங்கல் திருநாளை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2 கோடியே 60 ஆயிரத்து 49 ஆயிரத்து 60 குடும்பங் களுக்கு பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை உள்பட 20 பொருட்களுடன் சேர்த்து பொங்கல் பரிசுத் தொகுப்புடன் முழு கரும்பும் கொண்டு மொத்தம் 21 பொருட்கள் வழங்கும் திட்டத்தினை முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

நான் முதல்வன் திட்டத்தின் மாபெரும் திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இணையத் தளமும் தொடக்கம்.

பொதுமக்களுக்கு அரசுப் பணிகள் விரைவாகவும் எளிதாகவும் சென்றடையும் வகையில் டிசம்பர் 18 இல் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடக்கம்.

மதுரை நெல்லுப்பேட்டையில் உள்ள ஆதி மூலம் மாநகராட்சி பள்ளியில் சிறார்களுக்கு காலை உணவுத் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார்.

ஜனவரி 7 உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது.

மாணவர்களை நல்வழிப்படுத்தும் 'சிற்பி' திட்டம் தொடக்கம்.

குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்கும் திட்டம்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்!

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சென்னை இலக்கியத் திருவிழாவை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் 100 நூல்களை வெளியிட்டார்.

'திராவிட மாடல்' ஆட்சியின் முத்தான சாதனைகள்! - முதல்வர் மு.க.ஸ்டாலின்

✶ என் கையில் முதலமைச்சர் என்ற பொறுப்பு வந்து 33 மாதங்கள் ஆகிறது. இவை "முன்னேற்ற மாதங்கள்!" "சாதனை மாதங்கள்!" இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 விழுக்காடு பங்கைத் தருகிறது தமிழ்நாட்டின் பொருளாதார வளம்! இது, திராவிட மாடல் ஆட்சியின் முதல் சாதனை.

✶ இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது; இது, இரண்டாவது சாதனை.

✶ ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24 விழுக்காடாக இருக்கும்போது தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19 விழுக்காடாக உயர்ந்துள்ளது! இது, மூன்றாவது சாதனை.

✶ இந்திய அளவில் பணவீக்கமானது 6.65 விழுக்காடாக இருக்கும்போது, தமிழ்நாட்டில் அது 5.97 விழுக்காடாக குறைந்து உள்ளது! இது, நான்காவது சாதனை.

✶ ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது! இது, ஐந்தாவது சாதனை.

✶ மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது! இது, ஆறாவது சாதனை.

✶ தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14-ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாட்டை 3-ஆவது இடத்துக்கு உயர்த்தி உள்ளோம்! இது, ஏழாவது சாதனை.

✶ கல்வியில் இரண்டாவது இடத்துக்குத் தமிழ்நாட்டை உயர்த்தியது இந்த ஆட்சியின் எட்டாவது சாதனை.

✶ புத்தாக்கத் தொழில்கள் வரிசையில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பது ஒன்பதாவது சாதனை.

✶ இளைஞர்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்புநிலை மக்கள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோர் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து, தங்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருவதாகச் சொல்லத் தொடங்கி இருப்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் பத்தாவது சாதனை.

மேலும் இல்லம் தோறும் பயன்பெறும் மக்கள்!

✶ மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை, "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை"யாக ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிர் பெறுகிறார்கள்.

✶ "விடியல்" பேருந்து பயணத் திட்டம் மூலமாக 445 கோடி முறை பயணித்து பெண்கள் பயனடைந்து இருக்கிறார்கள்.

✶ "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தால் பயனடைந்தவர்கள் ஒரு கோடி பேர்.

✶ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 16 லட்சம் பிள்ளைகள் வயிறார உணவு உண்கிறார்கள்.

✶ நகைக்கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 13 லட்சத்து 12 ஆயிரம் பேர்.

✶ கூட்டுறவுக் கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 1 லட்சம் பேர்.

✶ மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் "புதுமைப் பெண்" திட்டப்படி 2 ஆண்டுகளுக்கு, 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள்.

✶ 'நான் முதல்வன்' திட்டத்தில் 2 ஆண்டுகளில், 28 லட்சம் இளைஞர்கள் பயனடைந்துள்ளார்கள்.

✶ 'இல்லம் தேடி கல்வித்திட்டத்தில்' 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளிப் பிள்ளைகள் பயனடைந்திருக்கிறார்கள்.

✶ 62 லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் புதிய குடிநீர் இணைப்பை பெற்றுள்ளது.

✶ 2லட்சம் உழவர்கள் புதிய மின் இணைப்பு பெற்றுள்ளார்கள்.

✶ உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 30 லட்சம் முதியோர் மாதந்தோறும் பெறுகிறார்கள்.

✶ உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 5 லட்சம் மாற்றுத் திறனாளிகள் மாதந்தோறும் பெறுகிறார்கள்.

✶ கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்வளர்ச்சித் திட்டத்தால் பயனடைந்தவர்கள் 42 லட்சத்து 33 ஆயிரம் பேர்.

✶ முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு தொகை உயர்ந்த பிறகு பயன்பெற்றவர்கள் 20 லட்சத்து 55 ஆயிரம் பேர்.

✶ மீன்பிடி கால உதவித்தொகை பெற்றவர்கள் 4 லட்சத்து 86 ஆயிரம் பேர்.

✶ மீன்பிடி இல்லாதகால உதவித்தொகை பெற்றவர்கள் 5 லட்சத்து 15 ஆயிரம் பேர்.

✶ 'நம்மைக் காக்கும் 48' திட்டத்தால் பயனடைந்தவர்கள் 2 லட்சம் பேர்.

✶ 'முதல்வரின் முகவரி திட்ட'த்தினால் பயனடைந்தவர்கள் 19 லட்சத்து 69 ஆயிரம் பேர்.

✶ 'மக்களுடன் முதல்வர் திட்ட'த்தின் மூலமாக, 3 லட்சத்து 40 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு உள்ளது.

✶ சமீபத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட 45 லட்சம் குடும்பங்களுக்கு ரூ. 6 ஆயிரம் மற்றும் ரூபாய் ஆயிரம் என நிவாரணத் தொகை வழங்கி இருக்கிறோம்.

✶ அதுமட்டுமல்ல, இந்த 33 மாதங்களில் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று 6 ஆயிரத்து 569 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உதவிகளை இலட்சக்கணக்கான மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

-முதல்வர் மு.க.ஸ்டாலின்

(சட்டப்பேரவை 15.2.2024)

தமிழ்நாடு அரசுப் பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். மசோதா தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றம்.

தமிழ்நாடு மற்றும் வெளிநாடு பதிப்பகத்தினரிடையே 365 நூல்களை மொழி பெயர்ப்பு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

ஒடிசாவில் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஒடிசா மாநில விளையாட்டுத் துறை அமைச்சக அதிகாரிகளுடன் உலகத்தரம் வாய்ந்த வகையில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

17 ஆண்டுகளுக்குப் பிறகு பழநி மலைக் கோயில் குடமுழுக்கு நடைபெற்றது.

நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடந்த 'கிரெடாய்' கண்காட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் தொலை நோக்கு திட்டம் 2023ஐ வெளியிட்டார்.

நாடு முழுவதும் உள்ள 5 ஆயிரம் அரசு பள்ளி மாணவர்கள் உருவாக்கிய, 150 செயற்கை கோள்களை சுமந்து சென்ற 'ஹைபிரிட் சவுண்டிங்' ராக்கெட் மாமல்லபுரம் அருகே திருவிடந்தை கடற்கரை பகுதியில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

தமிழ்நாட்டில் 433 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், 44 இடங்களில் புதிய மருத்துவமனைக்கு அடிக்கல், திருநங்கைகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

மின்சார வாகன உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இதன்மூலம் ரூ.50,000 கோடி முதலீட்டை ஈர்த்து 1.5 லட்சம் வேலை வாய்ப்பை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏற்றமிகு சிறப்புத் திட்டங்கள் எனும் பெயரில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குவது, காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், திருநங்கைகளுக்கு ஒய்வூதியம் அதிகரிப்பு உள்ளிட்ட ஏழு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலைஞர் மு.கருணாநிதி மாடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

கீழடியில் 2 ஏக்கர் பரப்பளவில் ரூ.18.43 கோடி செலவில் பிரமாண்டமாக கட்டப்பட்ட தொல்பொருள் அருங்காட்சியத்தைதமிழ்நாடுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை, நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார். அதில் பெண்களுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை, கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் இடம் பெற்றன.

தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறை மூலம் ரூ.14,000 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் காவல்துறையின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு 'அவள்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் பெண் காவலர்களின் சூழ்நிலைக்கேற்ப விடுப்பு வழங்குவது உள்ளிட்ட 9 திட்டங்களை அறிவித்தார்.

தமிழ்நாட்டில் ஒரு கோடி மகளிருக்கு ரூ.1,000 மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

கேரள மாநிலம், கோட்டயம், வைக்கத்தில் நடந்த வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தின் நூற்றாண்டு விழாவில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைக்கம் சத்தியாகிரக போராட்ட நூற்றாண்டு விழாவிற்கான இலச்சினையை வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் கீழடி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளான கொந்தகை, அகரம், திருவண்ணா மலை மாவட்டம் கீழ்நமண்டி ஆகிய இடங்களில் அகழாய்வு பணிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கடற்கரை ரோந்து மற்றும் மீட்பு இழுவை வாகனங்களின் சேவையை தொடங்கி வைத்து, ரூ.20 கோடியில் 12 புதிய தீயணைப்பு நிலையங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

நெல்லையில் "பொருநை" அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகள் கணினி மயமாக்கப்பட்டதை தொடர்ந்து, வீட்டு வரி, சொத்துவரிகளை ஆன்லைனில் செலுத்தும் வசதி அமலானது.

அரசுப் பேருந்துகளில் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு பயணச் சீட்டு கட்டணம் கிடையாது என தமிழ்நாடு அரசு அறிவித்தது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து, சென்னை அடுத்த ஒரகடத்தில் நிறுவியுள்ள தொழில் 4.0 தொழில் நுட்ப மையங்களை திறந்து வைத்தார்.

சென்னை, கிண்டி கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 1,000 படுக்கைகளுடன் 240.54 கோடி செலவில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை முதல்வர் மு.க. ஸ்டாலின், அவர்கள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் இணைந்து திறந்து வைத்தார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் ரூ.116 கோடியில் நிதி நுட்ப நகரம் அமைப்பதற்கும், முதற்கட்டமாக ரூ.254 கோடியில் சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம் கட்டுவதற்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

திருவாரூர் மாவட்டம், காட்டூரில் புதிதாக கட்டப்பட்ட கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞரின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் அவரது சகோதரி செல்வி செல்வம் ஆகியோர் திறந்து வைத்தனர்.

சென்னையில் நடந்த பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி, காடாம்புலியூரில் அமைக்கப்பட்டுள்ள முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகள் திறன் மேம்பாட்டுக்காக 6 மாவட்டங்களில் முதற்கட்டமாக பயிற்சி அரங்கங்கள் அமைக்கப்படும் என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

மதுரையில் ரூ.215 கோடி மதிப்பில் சர்வதேச தரத்தில் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

சட்டம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் 'சத்தியதேவ் லா அகாடமி'யை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

ராணிப்பேட்டை சிப்காட் நிலை 3இல் திரவ மருத்துவ மற்றும் தொழில் ஆக்சிஜன், திரவ நைட்ரஜன், திரவ ஆர்கான் உற்பத்தியை மேற்கொள்ளுவதற்காக அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் முதியோர் உதவித் தொகை ரூ.1,200 உயர்த்தி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கத்தில் ஹாக்கி விளையாட்டரங்கம், ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் விண்ணப்பப் பதிவு செய்யும் பணியை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டம் தொப்பூரில் தொடங்கி வைத்தார்.

கிழக்குக் கடற்கரை சாலை பேரூரில், ரூ.4,276 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு முழுவதும் 31,000 அரசுப் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் யு.பி.எஸ். நிறுவனம் - சென்னைப் போரூரில் தொழில்நுட்ப மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

நடப்பாண்டில் விவசாயிகளுக்கு 50 ஆயிரம் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் 31,000 பள்ளிகளில் பயிலும் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருக்குவளையில் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கு ஆண்டுக்கு 4 முறை மின் கட்டணச் சலுகை வழங்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு.

கோயில்களில் அர்ச்சகர்களை நியமிக்கும் விவகாரத்தில் தமிழ்நாட்டில் தற்போது இருக்கும் நிலையே தொடரும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவு.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்ற தேர்வர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்ட தொடக்க விழா காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவில், திட்டத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் 13 பெண்களுக்கு வங்கி பற்று அட்டைகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வீதம் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இறக்கும் முன் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப் படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

சென்னையில் சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகள் சிவன், மயில்சாமி அண்ணாதுரை, நாராயணன், ராஜரா், சங்கரன், ஆசீர் பாக்கியராஜ், வனிதா, நிகார் ஷாஜி, வீரமுத்துவேல் ஆகியோருக்கு தலா ரூ.25 லட்சமும், பாராட்டு சான்றிதழும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

அடுக்குமாடி குடியிருப்புகளில் பொது வசதிகளுக்கான மின் இணைப்பு கட்டணம் யூனிட்டுக்கு ரூ.8ல் இருந்து ரூ.5.50 குறைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

சாலைகளில் ஏற்படும் இடர்ப்பாடுகள் குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிப்பதற்காக 'நம்ம சாலை' என்ற புதிய செயலியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கத்தை (டாஸ்கான் 2023) அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

கோயில்களில் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிக்கும் விவகாரத்தில் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள அரசாணை குறித்து எந்தவித கருத்து கூறவோ அல்லது தற்போது அதற்கு தடை விதிக்கவோ முடியாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுநர் திருப்பி அனுப்பிய பல்கலைக்கழகங்கள் தொடர்பான 10 மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டன.

'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டத்தின்படி அனைத்து மாவட்ட கலெக்டர்களும், மாதத்தில் ஒரு நாள் முழுவதும் கிராமங்களில் தங்கி மக்களின் குறைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு.

சென்னையில் ஓ.எம்.ஆர். சாலையில் இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடியில் 'U' வடிவ மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மிக்ஜாம் புயல் பாதிப்பு மற்றும் தென் மாவட்ட வெள்ள சேதங்களுக்கு நிவாரண நிதியை வழங்க கோரி டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை மனு அளித்தார்.

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்களுக்கு ரூபாய் 6000 நிவாரண நிதி வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கோவையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால், ரூபாய் 6000, ரூபாய் ஆயிரம் என்று அறிவிக்கப்பட்டு அம்மக்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டது.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா - சிறப்பு மலர் வெளியீடு, முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் பங்கேற்பு.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.1000 கோடியில் நிவாரணத் தொகுப்பு திட்டம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தை 1 பொங்கல் திருநாளை முன்னிட்டு அனைத்து குடும்பத்தினருக்கும் ரூ.1000 மற்றும் 1 கிலோ பச்சரிசி - 1 கிலோ சர்க்கரை வழங்கல் - மக்கள் மகிழ்ச்சி.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் முதலீடுகளை ஈர்க்க ஸ்பெயின் பயணம் மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் சென்னையில் 'கேலோ இந்தியா' விளையாட்டுப் போட்டியை, முதல்வர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் பிரதமர் தொடங்கி வைத்தார்!

26.02.2024

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவகம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட அண்ணா நினைவகம் திறப்பு! ●